இனிதான உலகத்தில் அழகான தமிழீழம்
உருவாக காண்போமே மாவீரரே
உங்கள் உயர்வான தியாகத்தின்
மலர்கின்ற தேசத்தை
நிலையாக ஆழ்வோமே மாவீரரே
தேசத்தின் வேராகி விழுதாகி நின்றீர்
நெஞ்சுக்குள் விடிகாலை பொழுதாகி நின்றீர்
அழியாத வரலாற்றில் மொழியகினீர்

பூமீதும் சந்தண வாசம்
புங்காற்றில் உங்களின் கீதம்
புவி லாழும் தெய்வங்கள் மாவீரரே
பாவாரம் சூடிடும் நேரம்
பால் வார்க்கும் கண்களில் ஈரம்
நாம் போற்றும் தெய்வங்கள் மாவீரரே
யார் யாருக்கு என்பது இல்லை
எல்லோரும் எங்களின் பிள்ளை
ஒரு நாளும் மறவோமே மாவீரரே
தமிழ் வீரம் பொங்கிடும் நேரம்
ஒன்றாகிப் போரிடும் காலம்
நாம் ஆழ்வோம் ஈழத்தை மாவீரரே

இனிதான உலகத்தில் அழகான தமிழீழம்
உருவாக காண்போமே மாவீரரே

பொய்யாகி வாழ்ந்தது போதும்
போராடும் வல்லமை தாரும்
வாழ் வாங்கும் வாழும் மாவீரரே
மண்மீது உரிமைகள் வேண்டும்
மகிழ்வோடு வாழ்ந்திடல் வேண்டும்
எமை நாமே ஆழ்வோமே மாவீரரே
நீர் வாழும் கல்லறை பேசும்
நெருப்பாகி பாகையினில் வீசும்
போர் தானே தீர்வு மாவீரரே
எல்லோரும் ஒன்றேன ஆவோம்
உயிர் ஈழம் மீட்டிட போவோம்
வெல்லாமல் ஓயோம் மாவீரரே

இனிதான உலகத்தில் அழகான தமிழீழம்
உருவாக காண்போமே மாவீரரே